DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 345/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சரவணன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.கோட்டைசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 18.02.2026

---

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது உசிலனக்கோட்டையில வசித்துவருகிறேன்.பந்தல்போடும வேலை பார்த்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோனவர் எனது தந்தைஆவார். கடந்த 03.10.2023 தேதி சோழியங்குடியில் பந்தல் போட்டதற்கு பணம் வாங்குவதற்காக காலை சுமார் 6 மணியளவில் வீட்டிலிருந்து கிளம்பி அவருக்கு சொந்தமான புளுகலர் TVS XL இருசக்கரவாகனத்தில்சென்று பணம்பெற்றுகொண்டு திரும்ப அதே வழியில் வரும்போது சோழியங்குடி பக்கத்தில் ஒரு தர்கா அருகே வரும்போது அவருக்கு

பின்னால் இருந்து வந்த மாருதி ஆல்டோ காரை ஓட்டி வந்த நபர் என் அப்பாவின் வாகனத்தின் மீது மோதியதில் கீழே விழுந்து காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். அந்த இடத்தில் இருந்த மாரிமுத்து என்பவர் இந்த தகவலை போன் மூலம் சொன்னார்.அதன்பிறகு அங்கிருநத மற்ற நபர்களும் எனக்கு போன் மூலம் தகவல்சொன்னாாகள். நான் சம்பவயிடத்திற்கு கிளம்பும்போது திருவாடானை அரசு மருததுவமனைக்கு ஆம்புலன்சில் எனது அப்பாவை கொண்டு சென்றதாக தகவல் தெரிந்து நான் நேராக மருத்துவமனைக்கு சென்றேன். ஆம்புலன்சில் எனது அப்பாவை ஏற்றிசெல்லும்போது செல்லும் வழியில் எனது அம்மாவையையும் கூட்டிசென்றுள்ளார்கள்.

2. விபத்தை ஏற்படுத்திய நபர் தர்மபுரியை சேர்ந்தவர் என்றும் துாக்கத்தில் ஒட்டி வந்து விபத்து ஏற்படுத்திவிட்டதாக போலிசார் என்னிடம் கூறினார்கள். காவல்நிலையத்தில் வைத்து இதுசம்மந்தமாக நானும் எனது அம்மாவும் புகார் கொடுத்தோம். நாங்கள் முதலில் எழுதி கொடுத்தோம். அதை போலிசார் அதில் இருந்த எழுத்துபிழைகளை சரிசெய்து எழுதினார்கள். அந்த புகாரில் என்ன எழுதப்பப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். அந்தபுகார் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.அது அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார்என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் முதல்விசாரணையில் தெரிவித்த விவரங்களை தான் போலிசார் விசாரணையிலும் தெரிவித்தேன். நாங்கள் போலிசாரிடம் எழுதி கொடுத்த புகாரில் உள்ள எழுத்து பிழையை மட்டும் போலிசார் திருத்தி புகார் எழுதி கொண்டனர்., சோழியக்குடியிலிருந்து தொண்டி நோக்கி வரும் திசையில் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு நேரடியாக சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். கிளம்பினேன் அப்போது எனது அப்பாவை திருவடானை மருத்துவமனை கொண்டு செல்வதாக கேள்விபட்டு அங்குசென்றுவிட்டேன் அதன்பின் எனது அப்பாவின் அடக்கம் முடிந்த பின்பு சம்பவயிடம் சென்று பார்த்தேன்.

2.நாங்கள் காவல்நிலையத்தில் வைத்து புகார்கொடுக்கவில்லை என்றும் மருததுவமனையில் வைத்து புகார் கொடுத்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.